மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, ஏற்கெனவே 390 தொழிற்கூடங்கள், 141 மேம்படுத்தப்பட்ட மனைகள் சிட்கோ மூலமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், தனியார் நிலத்தை, தொழில் தொடங்குவதற்குத் தருவதாக இங்கே உறுதியளித்திருக்கிறார்கள். அரசு நிர்ணயிக்கக்கூடிய சந்தை விலைக்குத் தனியார் தருவதற்குத் தயாராக இருப்பார்களேயானால், மாவட்டத் தொழில் மையம் மூலமாகவோ அல்லது சிட்கோ மூலமாகவோ இதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

124—

தாட்கோ கடனுதவி

***23030—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் கடனுதவிக்கு மானியத்தை அரசு வழங்கினாலும், கடன் தர மறுக்கின்ற வங்கிகளுக்கு கடனுதவித் திட்டத்தை அவசியம் செயல்படுத்த வேண்டும் என அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளால் கடன் வழங்க மறுக்கப்படும் தகுதியுள்ள இனங்களில், அரசு அறிவுரைப்படி, மாவட்ட ஆட்சியர் முன்னோடி வங்கி மேலாளருடன் கலந்து பேசி தாட்கோ மானியத்துடன் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு வரும் ஆதிதிராவிட ஏழை எளிய, வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள மக்கள் பயனடைகின்ற வகையிலும், பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்கின்ற வகையிலும், ஆதிதிராவிடர் நலத் துறைமூலம் வழங்கப்படும் தாட்கோ மானியக் கடனுதவித்

2005 மார்ச் 9]

திட்டத்தில், சிறுதொழில் மற்றும் தனிநபர் கடன்களான மளிகைக் கடைக் கடன், கறவை மாட்டுக் கடன், தையல் இயந்திரம் வாங்கும் கடன், சைக்கிள் கடைக் கடன், வண்டி மாடுக் கடன் இன்னும் பல்வேறு கடன்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தற்பொழுது சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். பெண்கள் மேம்பாடு அடைகின்ற வகையில், ஆதிதிராவிடப் பெண்கள் நிலம் வாங்கும் கடன்களுக்கு இன்றைக்கு 50% மானியத் தொகையுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் 2 இலட்சம் ரூபாய் வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இதுபோன்ற திட்டங்களை வங்கிகளுக்கு அரசு ஒதுக்கீடு செய்து, ஏழை எளிய மக்களுக்கு வழங்கினாலும்கூட, தேசிய வங்கிகள், Scheduled வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றிற்கு பயனாளி நபர்கள் செல்லுகின்றபோது, தேர்வு செய்யப்பட்ட மானியத் தொகையைப் பெறுகின்ற அந்த நபர்கள், அந்த வங்கிகளை அணுகுகிறபோது ஓரளவிற்கு வசதி வாய்ப்புள்ளவர்கள், வங்கிகளில் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளவர்கள் மட்டுமே இதுபோன்ற மானியக் கடனைப் பெறுகின்றனர். ஆனால், பெரும்பாலான ஏழை எளிய மக்களுக்கு இதுபோன்ற கடன்களைக் கொடுக்க வங்கிகள் தவிர்த்து வருகின்றன. இதற்கு ஏதாவது ஒரு காரணத்தைக் காண்பித்து, ரூ. 20 ஆயிரம், 30 ஆயிரம் பெறுகின்ற கடனுக்குக்கூட security இருந்தால்தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி என்னவென்று கேளுங்கள்.

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: கடனைத் தர முடியும் என்ற பல்வேறு காரணங்களைக் காட்டி தவிர்த்துவிடுகின்றார்கள். எனவே, இதுபோன்ற கடன்களுக்கு, வங்கிகளுக்கு ஒரு கண்டிப்பான உத்தரவை வழங்கி, ஏழை எளிய மக்கள் பயனடைகின்ற வகையிலே அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகள், 'தாட்கோ' மானியத்தைப் பெற்றுக்கொண்ட பிறகும், சில இனங்களில் கடன் தொகை வழங்க மறுப்பதாகப் புகார்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அவற்றை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பயனாளிகளுக்குரிய வங்கிக் கடன் தொகை வழங்கப்படுவதை உறுதி செய்ய, மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில், கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தி, 17-9-2002-இல்

ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆதிதிராவிடர் நல விரிவாக்க அலுவலர்கள் ஒவ்வொரு பயனாளிக்கும் வங்கிக் கடன் தொகை உரிய முறையில் முழுமையாகச் சென்று அடைகிறதா என்பதை ஆய்வு செய்து, மாவட்டக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும். வங்கிக் கடன்கள் வழங்கப்படாத நேர்வுகள்பற்றி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒவ்வொரு மாதமும் கூட்டப்பெறும் வங்கியாளர்கள் கூட்டத்தில் வைத்து விவாதிக்கப்பட்டு, தகுதியிருந்தும் கடன் வழங்கப்படாத பயனாளிகளுக்கு, உடனே கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும், வட்டார அளவிலான வங்கியாளர்களின் கூட்டங்களின்போதும் இப்படிப்பட்ட நேர்வுகளுக்கு உடனடியாகக் கடன்கள் வழங்க, 'தாட்கோ' மேலாளர் அவர்களால் வலியுறுத்தப்படுகிறது. கடன்கள் தவறாது வழங்கப்படுவது குறித்து, மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும், ஆங்காங்கு, அந்தந்த மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்களின் தேவைக்கேற்ப, மாவட்டச் செயல் திட்டத்தை உருவாக்கி, அந்தச் செயல் திட்டத்தை அந்தந்த ஆண்டு இறுதிக்குள், மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவால், 'தாட்கோ' மேலாளர் மூலம் கடன் தொகை மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தியாவிலேயே ஒரு முன்னோடி திட்டமான மகளிருக்கு நிலம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, 11,077 மகளிர் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இதுவரை வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள 6,970 விண்ணப்பங்களில், 818 விண்ணப்பங்களுக்கு மட்டும் வங்கிகள் இதுவரை ஒப்புதல் அளித்துள்ளன. இதுபோன்ற பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வங்கிகள் உடனடியாக கடன் வழங்க முன்வர வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். விரைவில், அனைவருக்கும் அந்த நிலம் வழங்கும் திட்டத்தின்படி, நிலம் வாங்கக் கடன்கள் கண்டிப்பாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானமூர்த்தி.

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2001-க்குப் பிறகு, இதுவரையில், 'தாட்கோ' மூலம் எத்தனை

2005 மார்ச் 9]

நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டது? இதற்கு எவ்வளவு நிதி, மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சரிடத்திலே, பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-லேயிருந்து நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, கடந்த மூன்றாண்டுகளில், கிட்டத்தட்ட 225.39 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. பயனாளிகள், 3,45,971 பேர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். 1996 முதல் 2001 வரை, கடந்த தி.மு.க. ஆட்சியில், ஐந்தாண்டு காலத்தில், பயனாளிகள் 95,398 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டு காலத்தில் மட்டும் மானியத் தொகையாக 185.35 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் செ.கு. தமிழரசன்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாட்கோ' மூலம், ஆதிதிராவிட மக்கள் தொழில் தொடங்குவதற்கு முதலீட்டுத் தொகையை மானியமாகத் தந்தாலுங்கூட, தேசிய வங்கிகள் கடன் தொகையைத் தருவதற்கு அலைக்கழித்து வருகின்றன என்கிற நிதர்சனமான உண்மையை, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்தே தெரிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வோராண்டும் தேசிய வங்கிகளுக்கு ஆதிதிராவிடர் நலத் துறையின்மூலமாக, 'தாட்கோ' மூலமாக, மிகக் குறைந்தபட்சம் 50 கோடியிலிருந்து 60 கோடி ரூபாய் வரை நாம் வைப்புத் தொகையாக, deposit தொகையாகப் பெறுகிறோம். இந்தத் தொகையையே ஒரு முன்வைப்பாக ரிசர்வ் வங்கியிலே வைத்து, 'தாட்கோ'வே, ஒரு தனி வங்கியை உருவாக்கி, கடன் தருவதற்கு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே, அகதிகள் மறுவாழ்விற்காக, 'ரெப்கோ வங்கி' என்கின்ற ஒரு வங்கியை நாம் நடைமுறையிலே பார்க்கிறோம். அதேபோல், தாயகம் திரும்பியோருக்காக, 'தாய்கோ வங்கி' என்கின்ற ஒரு வங்கியை நடைமுறையிலே நாம் பார்க்கிறோம். ஆகவே, ஆதிதிராவிட மக்களுடைய அலைக்கழிப்பைத் தவிர்ப்பதற்காக 'தாட்கோ'வே, 50 கோடி அல்லது 60 கோடி ரூபாயை தேசிய வங்கிகளிலே முதலீடு செய்வதற்குப் பதிலாக, ரிசர்வ் வங்கியிலே முதலீடு செய்து, ஒரு வங்கியை ஏன் தொடங்கக் கூடாது என்றும், அதேநேரத்திலே அது வருகிறவரை, கூட்டுறவுத் துறைக்காக வங்கிகள் இருக்கின்றன; கூட்டுறவுத் துறை வங்கிகளிலே நீங்கள் ஒரு ஒப்பந்தத்தை

ஏற்படுத்தி, கூட்டுறவுத் துறை வங்கிகளின்மூலம் இந்தக் கடனை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுப்பீர்களா என்பதைப் பேரவைத் தலைவரின் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இதுபோன்ற வங்கிகள் மானியம் வழங்கினாலும், கடன் கொடுப்பது தாமதப்படுத்தப்பட்டு வருவதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்ற பிறகு இதுபோன்ற சீர்திருத்த நடவடிக்கையை எடுத்ததன் காரணமாக, கடந்த காலங்களைவிட இப்போது அதிகமான பயனாளிகள் பயன் பெறக்கூடிய அளவுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும், கடந்த காலங்களில் தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்து கடன் வழங்கப்பெறாமல் வங்கியாளர்களால் வழங்கப்பட்ட கடன் தொகை திரும்பச் செலுத்தப்படாமல், அவர்களால் மீண்டும் கடன் கொடுக்க முன்வருவது தாமதப்பட்டு வருவதால், இதுபோன்ற நிகழ்வுகள் வருங்காலங்களில் வரக் கூடாது என்றுதான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்து முறையாக மானியத் தொகை வழங்கி, அவர்களுக்குக் கடன் பெற்றுக் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக கடனை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, இப்போது அதிகமான அளவுக்குப் பெண்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. முறையாகத் திரும்பச் செலுத்தப்பட்டு வருகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆய்வுக்குக் கொண்டு செல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Adi Dravidar Housing Development Corporation என்று அழைக்கப்படுகிற இந்தத் தாட்கோ ஒரு காலத்தில் வீடுகள் கட்டுவதற்காகக் கடன் கொடுத்து வந்தாலும்கூட, இப்போது வீடுகள் கட்டுவதற்கும் இந்தத் தாட்கோவுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. வீடுகள் கட்டுவதற்கு தாட்கோ கடன் கொடுப்பதும் இல்லை. ஆனால், அதேசமயத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்த நிறுவனமானது, அவர்களுக்கு வாகனங்கள் வாங்கக் கடன்

2005 மார்ச் 9]

கொடுத்தாலும்கூட, அதற்குக்கூட அவர்கள் பிணையம் கேட்கிறார்கள். அந்த வாகனத்தையே பிணையமாக வைத்துக்கொள்ளாமல் அதற்குக்கூட பிணையம் கேட்கிற இந்த முறை தவிர்க்கப்பட வேண்டும். அதை வங்கிகளிலே கேட்கின்றபோது, நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது, ரிசர்வ் வங்கி அவ்வாறு சொல்லியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 25 ஆயிரம் ரூபாய்க்கு மேலே கடன் கொடுக்கின்றபோது அதற்கு பிணையம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், ஆதிதிராவிட மக்களுக்கு இவ்வாறு கடன் கொடுக்கின்றபோது, பிணையமே கேட்கக் கூடாது என்று மைய அரசை, தமிழக அரசு வலியுறுத்துமா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் என்ற பெயரில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு உருவாக்கப்பட்ட வாரியமாகத்தான் இருந்தது. 1989 ஆம் ஆண்டிலே வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தை உள்ளாட்சித் துறைக்கு வழங்கி, இப்போது உள்ளாட்சித் துறையின் மூலமாகப் பயனாளிகளுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த இலவசத் தொகுப்பு வீடு திட்டத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் தாட்கோ மூலமாக வழங்கப்படுகிறது. 20 ஆயிரம் ரூபாய் உள்ளாட்சித் துறையின் மூலமாக, ஆக, 32 ஆயிரம் ரூபாயில் இலவசத் தொகுப்பு வீடு வழங்கப்பட்டு, இப்போது உள்ளாட்சித் துறையின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்குகிற திட்டத்திற்கு surety-யே கிடையாது. ஒரு இலட்சத்திற்கு மேலாக கடன் வழங்கக்கூடிய கடன் திட்டத்திற்கு மட்டும் surety வங்கிகளால் கேட்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, வங்கிகள் மூலமாக கடன்கள் வழங்குவதற்கு Surety இல்லாமலே, எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கடன் வழங்கலாமா? (குறுக்கீடு) surety அதாவது, security இல்லாமல் வங்கிகள் மூலமாக எவ்வளவு நிதியானாலும் முழுமையாக கடன் வழங்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துமா என்று கேட்கிறார்கள். கண்டிப்பாக, அந்தமாதிரி மத்திய அரசு ஒருவேளை surety இல்லாமல், security இல்லாமல் கடன் வழங்குங்கள் என்று சொன்னால், அது நன்மையாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு மானியத் தொகை விடுவிக்கப்பட்டாலும், கிராமங்களிலே இருக்கிற Scheduled வங்கிகள், தத்தெடுக்கப்பட்ட கிராமங்களிலே இருக்கின்ற வங்கிகளிலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கடன்களை வழங்காமல் இருக்கின்ற காரணத்தால் பல கிராமங்களிலே தாட்கோ மானியம் வழங்கப்பட்டால்கூட, கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற வங்கிகள் கடன்களை வழங்காமல் இருக்கின்றன. ஆகவே, நகர்ப் புறங்களிலே இருக்கின்ற எல்லா வங்கிகளும், தத்தெடுத்த கிராமங்களிலே, அவைகளுக்குத்தான் வழங்கப்படும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால்தான் பல வங்கிகளிலே கடன் வழங்கப்படாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் துறை, எல்லா வங்கிகளிலேயும், அந்தத் தொகுதிக்குட்பட்ட அத்தனை வங்கிகளிலேயும் அவர்களுக்குக் கடன் கிடைப்பதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, ஒவ்வொரு வங்கிக்கும் adopted village, தகுதியான கிராமம், ஊராட்சிகள்மூலம் தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள். அந்தந்தக் கிராம ஊராட்சிகளுக்கு அந்தந்த வங்கி மூலமாக மானியத்துடன் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அது குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரால் உருவாக்கப்படுகிற செயல் திட்டம்; இலக்கு வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை கடன்கள் இவ்வளவு நிதியில் மானியத்துடன் வழங்க வேண்டும் என்ற அந்த இலக்கை எய்துவதற்காக அவர்கள் விரும்புகிற கிராமங்களுக்கோ, ஊராட்சிகளுக்கோ, விரும்புகிற பயனாளிகளுக்கோ உடன்டியாக அந்த இலக்கை அடையக்கூடிய அளவுக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும், மத்திய அரசு மூலமாக அதிகமாகக் கடன்கள் வழங்க வேண்டும் என்று நிதியை அனுப்பினால், கண்டிப்பாக நீங்கள் சொன்ன அனைத்து வங்கிகளாலும் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள, நீங்கள் சொன்ன அனைத்துப் பயனாளிகளுக்கும் கடன்கள் வழங்குவதற்கு, ஒரு சிறப்பு நிதித் திட்டத்தை மத்திய அரசு வழங்கினால், கொடுத்தால், கண்டிப்பாக அனைத்து கிராமங்களுக்கும் கடன் வழங்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

2005 மார்ச் 9]

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகிற இந்தக் கடனுதவியானது காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சியர் தலைமையிலே ஒரு குழுவினை ஏற்படுத்தி, அதிலே மக்கள் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகக் கொண்டு, இரண்டு மாதங்களுக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கலந்தாய்வுக் கூட்டங்களை ஏற்பாடு செய்து, காலதாமதம் ஏற்படுகிற மனுதாரருடைய பிரச்சினையை ஆராய்ந்து, அதை உடனடியாகத் தீர்ப்பதற்கு இப்படிப்பட்ட கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற வங்கிகள் மூலமாக மானியத்துடன் கடன் வழங்க வேண்டும் என்றுதான், அதற்கு மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைத்து அரசாணை எண் 80, நாள் 17-9-2002-ன்படி மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைத்திருக்கிறார்கள். அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக, மாவட்ட மேலாளர், தாட்கோ செயல் உறுப்பினராக, மாவட்ட ஆட்சியரால் ஓராண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த இரண்டு நபர்கள் உறுப்பினர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். மாதம் ஒரு முறை குழு கூட்டப்பட்டு தாமதப்படுகின்ற இது போன்ற நிகழ்வுகளில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் கடன் முறையில் உண்மையாகவே ஆதிதிராவிட மக்கள் பல இன்னல்களை அடைந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, பூமி வாங்கும் திட்டத்திலே பயனாளி ஒரு தாலுகாவில் வசித்துக் கொண்டிருப்பார். அவர் வாங்கும் பூமி இன்னொரு தாலுகாவிலே இருக்கிறது. எந்த வங்கி இந்தப் பயனாளிக்குக் கடன் கொடுக்கும் என்பதில் பிரச்சினை. பூமி இருக்கும் இடத்திலா அல்லது இவர் தங்கும் இடத்திலா என்பது போன்ற பிரச்சினைகள். வங்கிக்கும் தாட்கோ அலுவலகத்திற்கும் போவதற்கே

இந்தப் பயனாளிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு ஒரு வழிமுறை வகுக்க வேண்டும். அவர் பூமி வாங்கும் இடத்தில் இருந்தாலும் அல்லது பூமி இருக்கும் இடத்தில் இல்லாமல் இருந்தாலும்கூட, அவர்களுக்குக் கண்டிப்பாக கடன்களைக் கொடுக்க முன்வர வேண்டும். ஆகவே, அரசு இதையெல்லாம் பரிசீலித்து, ஆதிதிராவிட மக்களுக்கு கடன் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நிலம் வழங்கும் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறார் என்றே கருதுகின்றேன். நிலம் ஒரு பக்கம் இருந்தால், பயனாளிகள் ஒரு பக்கம் இருந்தால் எப்படி அந்த நிலத்தை வாங்கிப் பயன்பெற முடியும் என்ற கருத்தைச் சொல்கிறார். நிலம் வாங்கும் திட்டம், விவசாயிகள் அடுத்தவர் நிலத்தில் உழைத்து, உழைத்துத் தேய்ந்து போகிற மக்களுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் சொந்தமாகவே வழங்கினால் அவர்கள் சொந்த நிலத்தில் எந்த அளவுக்கு உழைப்பார்கள், உழைத்து முன்னுக்கு வருவார்கள் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் நிலம் வாங்கும் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, விவசாயம் செய்கிறவர்கள் அருகிலே இருந்தால்தான் விவசாயத்தைச் செய்ய முடியும். நீங்கள் சொன்ன மாதிரி இன்னொரு இடத்திலே இருந்தால் அங்கேயிருந்து போய் வருவதற்கோ, விவசாயம் செய்து வரும் நிலத்தில் விவசாயத்தைப் பாதுகாப்பதற்கோ வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, அந்தந்த இடங்களில் ஆங்காங்கு அதிகமான நிலம் வைத்திருக்கிற நில உரிமையாளர்கள் நிலத்தைக் கொடுத்தால் அந்த ஊரிலுள்ள நிலமில்லாத ஏழையெளிய பெண்களுக்கு 50 சதவிகித மானியத்தோடு ரூபாய் ஒரு இலட்சம் அளவில் அந்த நிலத்தை வாங்கிக் கொடுக்கும் திட்டத்தை அறிமுகம் செய்து, இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 125, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.